1970 ஆகஸ்ட் 29]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கடந்த 5000 ஆண்டுகளாக வரலாற்று நூல்களை எடுத்துப் பார்த்தால் கல்லிலே எவ்வளவு மிக அரிய கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்றவற்றின் பெருமையைத் தெரிந்து கொள்வதற்கு அங்கே இருக்கும் கற்பாளங்களில் செதுக்கப்பட்டு இருப்பவைதான் மிகத் துணையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி நவீன காலத்தில் அவை ஒன்றும் பயன் அளிக்காது என்று சொல்வது பொருத்தமாகாது. கல்லில் செதுக்கப்பட்டவைகள் என்றும் நிலைத்து இருப்பவை. காண்போர் கண்களில் எல்லாம் நாள்தோறும் தென்படக் கூடியவை. அப்படிப்பட்ட கல் வெட்டுக்கள் நாட்டிற்கு மிகமிகத் தேவை.

கதர் விற்பனை

* 132 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1969–70-ம் ஆண்டில் தமிழகத்தில் அதிகமாக கதர் விற்பனை செய்த ஊராட்சி ஒன்றியம் எது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: காஞ்சீபுரம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: எவ்வளவு தொகைக்கு இந்த ஒன்றியத்தின் மூலம் கதர் விற்பனை செய்யப்பட்டது? சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ. 2,59,674.40 மதிப்புள்ள கதர் விற்கப்பட்டுள்ளது. இது தீபாவளி காலம், காந்தியார் நூற்றாண்டுக் காலம் ஆகிய காலங்களில் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக விற்கப்பட்டதாகும். இதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திலும் முதல் பரிசு ரூ. 500, இரண்டாவது பரிசு ரூ. 300, மூன்றாவது பரிசு ரூ. 200 ஆகிய நிலைகளிலே பாராட்டும் பொருட்டு கோப்பைகளும், கேடயங்களும் இவர்களுக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு, அப்படி வழங்குகின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள்

* 133 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்க ஊழலைக் கண்டுபிடிக்க விசேஷ ரகசியத் துப்பறியும் பிரிவை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) கூட்டுறவுச் சங்கங்களில் பணம் கையாடல் போன்ற குற்றங்களைக் கண்டு பிடிக்கவும், புலன் விசாரணை செய்யவும் காவல் துறையில் கூடுதலான தனி அலுவலர்கள் நியமிப்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

DR. H. V. HANDE: Sir, there are a number of societies where not only money has been irregularly spent but certain indents with higher rates have been made, probably with some understanding between the person who puts the rate and the person who indents for that. Such cases have been brought to the notice of the Department. Recently, one such case which has been brought to the notice of the authorities is the Tiruvarur Co-operative Society where a sum of a crore of rupees is involved. In such cases, where huge amounts to the tune of lakhs are involved, what steps do the Government propose to take to recover those amounts immediately as it may take a long time before the actual investigation is completed and the persons are booked?

THE HON. THIRU S.. Pa. ADITANAR: Sir, the appointment of the special staff is meant exclusively for the investigation of cases relating not only to misappropriation but also to other kinds of commercial crimes committed in the co-operative sector.

Regarding further action taken on the detection of cases, it depends upon each case. We have to hold enquiry and institute surcharge proceedings or prosecution proceedings. We have got Special Prosecutors to deal with cases in the criminal court. Probably, I may say that we have in five districts special staff to detect misappropriation and other commercial crimes. The matter under the consideration of the Government is the appointment of additional staff.

திரு. எம். சுரேந்திரன்: கூட்டுறவுத் துறையிலே ஆடிட் செய்வது டிபார்ட்மெண்டு வாரியாக இல்லாமல், வெளியாட்களை வைத்துச் செய்வது என்று அமைச்சர் அவர்களுக்கு யோசனை இருந்ததே, அந்த யோசனை இப்பொழுது எப்படி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கூட்டுறவுச சங்கங்களில், சிலவற்றில் இப்பொழுதே தனியார்கள் மூலம் தணிக்கை செய்யப் படுகிறது. வேறு பெரும்பாலான சங்கங்களில், டிபார்ட்மெண்டு மூலம் தணிக்கை செய்யப்படுகிறது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங் களில் ஏற்படுகின்ற பல தவறுகளை மாவட்டத்திலுள்ள மாவட்ட கலெக்டரோ மற்ற துறையோ விசாரணை செய்வதற்கு முடிவதில்லை. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடி நிர்வாகத்தின் கீழ், இந்தக் கூட்டுறவு சங்கங்களைக் கொண்டுவருவதற்கு செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா? பஞ்சாயத்து நிர்வாகத்திற்காக ஒரு பி.ஏ. போட்டிருப்பதுபோல மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூட்டுறவுத்

துறைக்காக ஒரு பி.ஏ. போடுவதுபற்றி செயற்குறிப்பு அரசாங்கத் திடம் ஏதேனும் இருக்கிறதா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்கு, கலெக்டருக்கு இப்பொழுது உதவியாளர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். ஆனால், விசாரணை செய்வது, குற்றங்களைக் கண்டுபிடிப்பது இவைகளெல்லாம் கலெக்டர் செய்ய முடியாத காரியம். போலீஸ் இலாகாவே இவைகளை இன்னும் திறம்படச் செய்ய முடியும். அதற்காக தனி அலுவலர்கள் நியமிப்பது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

Co-operation Department

*134 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether it is a fact the Government is contemplating to split the C.-operative Department into three sections to cope up with the increased volume of work; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம்: இது மாதிரி அதிகமாக வேலை வந்ததினால் டிபார்ட்மெண்டை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்போகிறோம் என்று தங்களுடைய அமைச்சர் அவையிலேயிருந்து அறிக்கை பத்திரிகையில் வந்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இவை தனி இலாகாக் களாக செயல்படுவதாகவும் எண்ணம் இல்லை, பிரிவுகளாகவும் செயல் படுவதாகவும் எண்ணமில்லை. நான் கூறுவது வேறு. அதாவது கிரெடிட் பார்ப்பதற்கு, கடன் கொடுக்கிற சங்கங்கள், வங்கிகள் இவை வளர்ச்சி அடையச் செய்வதற்கு, அவைகளைக் கண்காணிப்ப தற்கு, தனி அலுவலர்களை மேல் மட்டத்திலிருந்து கீழ் வரையில் நியமிப்பது என்பதுதான். தனிப் பிரிவாகவோ, அல்லது தனி இலாக்காவாகவோ இருக்காது. இலாகாவிற்கு ஒரு தலைமை என்ற முறையில் பதிவாளர் இருக்கிறார்கள்.

திரு. கே. விநாயகம்: தாங்கள் நிருபர்களுக்குக் கொடுத்த அறிக்கையிலே இருந்துதான் இந்தக் கேள்வியைத் தயார் செய்தேன். அதில் சொல்லப்பட்டிருப்பது இந்த டிபார்ட்மெண்டில் அதிகமாக வேலை வந்ததினால், தனித்தனியாக மூன்று பிரிவுகள், கிரெடிட் சொஸைடி, பங்ஷனல் சொஸைடி, அக்ரிகல்சரல் பாரம் சொஸைடி இப்படி மூன்று பிரிவுகளாக பிரித்து, ஒரே இயக்குனர் இருக்க வேண்டும். ஆனால் கீழே ஜாயிண்டு டைரக்டர்ஸ் என்றெல்லாம் போடுகிறேன் என்று தாங்கள் அறிக்கை விட்டது உண்மைதானா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, அந்த அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக துருவிப் பார்த்தார்களானால் அவர்களுக்குத் தெரியும். வேலை அதிகம்.